## வேதாந்த தேசிகன்
## வாழி திருநாமம்

உத்தமாம் புரட்டாசி ஓணத்தான் வாழியே
ஓர் மதுரகவி பனுவல் உள்ளுரைத்தான் வாழியே
தத்தில் முனிவாகன போகம் மிழைத்தான் வாழியே
தமிழ் மறைக்கு ஒண்பதினாயிரம் உரைத்தான் வாழியே
எத்திசையும் எதிவரர் போல் ஏத்த நின்றான் வாழியே
எழில் அரங்கர் இன்னருளுக்கு இலக்கானான் வாழியே
தொத்தறவே வாதிகளைத் தொலைத்திட்டான் வாழியே
தூப்புல் கோன் திருவடிகள் துலங்க என்றும் வாழியே

கவி வாதி சிங்கம் எனக் கண்ணுற்றான் வாழியே
கலங்காது இத்தரிசனத்தைக் காத்தளித்தான் வாழியே
நவில் தரு வேதாந்தத்தின் நல்லாசான் வாழியே
நவியில் எல்லாத் தந்திரத்தின் சுதந்தரத்தான் வாழியே
புவி குளிர நூல் பலவும் புகன்றிட்டான் வாழியே
புகரிலாதி ரகசியப் பொருள் உரைத்தான் வாழியே
கவி பாய் வேங்கடத் திருமால் கவின்கண்டை வாழியே
கலியாண குணத் தூப்புல் காவலன் தாள் வாழியே

---